அறிவிக்கை எண் – 01 /2016

| | |
|---|---|
| | **தமிழ்நாடு அரசு**<br>**பட்டு வளர்ச்சித்துறை,**<br>**சேலம் – 636 007.** |

**நேரடி நியமனம் மூலம் உதவி பட்டு ஆய்வாளர் மற்றும் இளநிலை பட்டு ஆய்வாளர் பணியிடம் நிரப்புவதற்கான அறிவிக்கை.**

தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறையில் தமிழ்நாடு தொழிற்சார்நிலைப் பணியின்கீழ் காலியாக உள்ள உதவி பட்டு ஆய்வாளர் மற்றும் இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வதற்காக, துறைமூலம் 09.05.2015 மற்றும் 16.05.2015 ஆகிய தேதிகளில் தினத்தந்தி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. தற்பொழுது, 16.05.2015 நாளிட்ட அறிவிக்கை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி ரத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே, 2014–15 ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிடங்களுடன் சேர்த்து நடப்பு ஆண்டில் (2015–16) நிரப்பப்பட வேண்டிய காலிப்பணியிடங்களுக்கும் கீழ்வரும் விவரங்களின்படி நேரடி நியமனம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து **இணைய வழி (Online -** www.sericultureexam.com.)மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஏற்கனவே 09.05.2015 செய்திதாள்களில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் அடிப்படையில் பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருப்பதற்கான செல்லத்தக்க சான்றிதழ் இணைத்து அனுப்பியவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க தேவையில்லை. இதர விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட தேர்வு கட்டணம், விண்ணப்ப கட்டணம் நீங்கலாக மீள அனுப்பி வைக்கப்படும். மனுதாரர்கள் செல்லத்தக்க சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவில்லையெனில், செல்லத்தக்க சான்றிதழ்களுடன், விண்ணப்ப கட்டணம் செலுத்தி இணையதளம் மூலம் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

| வ. எண் | பதவியின் பெயர் | மொத்த பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1) | உதவி பட்டு ஆய்வாளர் | 43 | ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4200 |
| 2) | இளநிலை பட்டு ஆய்வாளர் | 257 | ரூ.5200 – 20200 + தர ஊதியம் ரூ.2400 |
| | மொத்த பணியிடங்கள் | 300 | |

## <u>2.  காலிப்பணியிட ஒதுக்கீடு</u>

இனவழிச் சுழற்சி விதிகளின்படி கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

### (I) உதவி பட்டு ஆய்வாளர் பணி காலியிடங்கள் :

| இனம் | பொது | பெண் | பொது (தமிழ் வழி) | பெண் (தமிழ் வழி) | முன்னாள் இராணுவத்தினர் | முன்னாள் இராணுவத்தினர் (தமிழ் வழி) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொதுப் போட்டி (GT) | 8 | 3 | 2 | | | 1 | 14 |
| பிற்பட்ட வகுப்பினர் (BC) | 6 | 3 | | | | 1 | 10 |
| பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) (BCM) | 0 | 1 | | | | | 1 |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (MBC & DNC) | 6 | 2 | | 1 | 1 | | 10 |
| ஆதி திராவிடர் (SC) | 4 | 1 | | 1 | | | 6 |
| ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | 1 | 0 | | | | | 1 |
| பழங்குடியினர் (ST) | 0 | 1 | | | | | 1 |
| **மொத்தம்** | **25** | **11** | **2** | **2** | **1** | **2** | **43** |

### ( II)   இளநிலை பட்டு ஆய்வாளர் பணி காலியிடங்கள் :

| இனம் | பொது | பெண் | பெண் (ஆதரவற்ற விதவை) | பொது (தமிழ் வழி) | பெண் (தமிழ் வழி) | பெண் (ஆதரவற்ற விதவை) (தமிழ் வழி) | முன்னாள் இராணுவத்தினர் | முன்னாள் இராணுவத்தினர் (தமிழ் வழி) | மாற்றுத் திறனாளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொதுப் போட்டி (GT) | 40 | 17 | 3 | 10 | 3 | 0 | 3 | 0 | 1 | 77 |
| பிற்பட்ட வகுப்பினர் (BC) | 37 | 13 | 0 | 7 | 4 | 2 | 0 | 4 | 0 | 67 |
| பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) (BCM) | 3 | 2 | 0 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 10 |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர்  (MBC & DNC) | 27 | 10 | 0 | 5 | 4 | 1 | 0 | 3 | 1 | 51 |
| ஆதி திராவிடர் (SC) | 21 | 8 | 1 | 4 | 1 | 1 | 1 | 1 | 1 | 39 |
| ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | 3 | 3 | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | 1 | 10 |
| பழங்குடியினர் (ST) | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 3 |
| **மொத்தம்** | **132** | **53** | **4** | **29** | **14** | **6** | **4** | **10** | **5** | **257** |

**3. தகுதிகள்**

**அ) வயது வரம்பு (01. 07.2015 அன்றைய தேதியில் )**

| வ. எண் | விண்ணப்பதாரர்கள் இன வகைகள் | குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது | |
|---|---|---|---|---|
| | | | உதவி பட்டு ஆய்வாளர் | இளநிலை பட்டு ஆய்வாளர் * |
| 1) | ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடியின வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | உச்ச வயது வரம்பு இல்லை | 35 வயதுக்குள் |
| 2) | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | | 32 வயதுக்குள் |
| 3) | ஏனைய பிரிவினர் (மேற்குறிப்பிட்டுள்ள பிரிவினர் தவிர) | | 30 வயதுக்குள் | 30 வயதுக்குள் |

* இளநிலை ஆய்வாளர் பதவிக்கு வ.எண் 1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்ட பிரிவினர்கள் பதவிக்குரிய கல்வித்தகுதியை விட கூடுதல் கல்வித்தகுதி பெற்றிருப்பின் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.
மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பு சலுகைகளுக்கு நடைமுறையிலுள்ள அரசு ஆணை எண் (நிலை) 704, பொதுத் (சிறப்பு –எ) துறை, நாள் 10.04.1964 பொருந்தும்.

**ஆ) கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் ( 13 .01.2016** அன்றைய தேதியில்)

| வ. எண் | பதவி | கல்வித்தகுதி | மற்றும் இதர தகுதிகள் |
|---|---|---|---|
| (அ) | உதவி பட்டு ஆய்வாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் மூலம் வழங்கப்பட்ட தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது வேதியியலை முதன்மை பாடமாக கொண்ட இளம் அறிவியல் பட்டப்படிப்பு | **அ) பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் **(அல்லது)** ஆ) ஒசூர், அரசு பட்டு பயிற்சிப் பள்ளியில் பட்டதாரிகளுக்கான 6 மாத பட்டு வளர்ப்பு பயிற்சியினை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். **(அல்லது)** இ) கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் பட்டு வளர்ப்பில் முதுநிலை பட்டய படிப்பு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| (ஆ) | இளநிலை பட்டு ஆய்வாளர் | பள்ளியிறுதி தேர்வில் பொது அறிவியலை ஒரு பாடமாக கொண்டு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | **அ) பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் **(அல்லது)** ஆ) ஒசூர் அரசு பட்டு பயிற்சிப் பள்ளியில் பட்டதாரி அல்லாதவர்களுக்கான 6 மாத பட்டு வளர்ப்பு பயிற்சியினை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். |

** கீழ்வரும் அலகுகளில் பெறப்பட்ட பட்டு வளர்ப்பில் செயல்முறை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் அவை பட்டு வளர்ப்புக்கு (Sericulture) போதிய (appropriate) தகுதிகளாக கருத இயலாது. எனவே, இத்தகைய சான்றிதழுடன் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்
- தனியார் பட்டு பல்நோக்கு (private poli-clinic centres) மையங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்.
- தனியார் பட்டு நூற்பு மையங்கள் மற்றும் தனியார் பட்டு முறுக்காலைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்
- தனியார் பட்டு வித்தகங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்

**<u>இ) உடற்தகுதி சான்று :</u>**

- விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட பதவிகளுக்கான களப்பணிக்கு ஏற்ற உடற் தகுதி பெற்றுள்ளனர் என்பதற்கான மருத்துவச்சான்று பெற்றிருக்க வேண்டும்.
- மேற்கண்ட பணிகள் யாவும் களப்பணிகளாக இருப்பதால் மாற்றுத்திறனாளிகள் உரிய உடற்த்தகுதி சான்று பெற்றிருக்க வேண்டும்.
- மேற்கண்ட பதவிகளுக்கு பார்வைத்திறனை பொருத்தமட்டில் தரம் III அல்லது அதற்கும் நல்லதான பார்வைத்தரம் வரையருக்கப்படுகிறது.

| பார்வை விபரம் | நல்ல பார்வைத்திறன் | அல்லது | குறைவான பார்வைத் திறன் |
|---|---|---|---|
| கண்ணாடி அணிந்து தூரப்பார்வை | **6/6** | | **6/12** |

மேற்கண்ட உடற்த்தகுதி சான்றுகள் நேர்முக தேர்வின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**<u>4. முக்கிய தேதிகள் :</u>**

<table>
<tr><td>அறிவிக்கை நாள்</td><td>:</td><td colspan="3">13 .01.2016</td></tr>
<tr><td>விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய கடைசி நாள்</td><td>:</td><td colspan="3">27.01.2016</td></tr>
<tr><td>விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள்</td><td>:</td><td colspan="3">27.01.2016</td></tr>
<tr><td>பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப நகல் மற்றும் வங்கி வரைவு இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் கடைசி நாள்</td><td>:</td><td colspan="3">28.01.2016, பிற்பகல் 5.45 மணி வரை</td></tr>
<tr><td rowspan="2">தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம்</td><td rowspan="2">:</td><td>இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிகளுக்கு</td><td>07.02.2016</td><td>முற்பகல் 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை</td></tr>
<tr><td>உதவி பட்டு ஆய்வாளர் பதவிகளுக்கு</td><td>07.02.2016</td><td>பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை</td></tr>
</table>

**5. விண்ணப்ப கட்டணம்**

விண்ணப்ப கட்டணமாக ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து எந்த இனத்தை சார்ந்தவர்களுக்கும் விலக்கு அளிக்கப்படமாட்டாது.

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அலுவலகத்திலிருந்து பரிந்துரை செய்யப்படும் நபர்களும் ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) விண்ணப்ப கட்டணம் செலுத்தி இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் வங்கிகளில் விண்ணப்ப கட்டணம், '**Director of Sericulture, Salem** ' என்ற பெயரில் சேலத்தில் மாற்றத்தக்க வகையில் ரூ.500/– க்கான வங்கி வரைவாக எடுக்கப்பட்டு பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் அனைத்து சுய சான்றொப்பமிட்ட சான்றிதழ் நகல்களுடன் "**இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, நேதாஜி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636 007**" என்ற முகவரிக்கு 28.01.2016 மாலை 5.45 மணிக்குள்ளாக கிடைக்கப்பெற வேண்டும்.

**6. எழுத்துத் தேர்வு (கொள்குறி வகை ( Objective Type) மற்றும் வாய்மொழித்தேர்வு குறித்த விபரம்**

| வ. எண் | பதவி | பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1) | இளநிலை பட்டு ஆய்வாளர் (எஸ்.எஸ்.எல்.சி தரம்) | அ) பொது அறிவு – 25 வினாக்கள் (43.75 மதிப்பெண்கள்) | 2 மணி நேரம் | 200 |
| | | ஆ) பொது அறிவியல் – 25 வினாக்கள் (43.75 மதிப்பெண்கள்) | | |
| | | இ) பட்டு வளர்ச்சி – 25 வினாக்கள் (43.75 மதிப்பெண்கள்) | | |
| | | ஈ) அறிவுக்கூர்மை திறன் – 25 வினாக்கள் (Aptitude Test) (43.75 மதிப்பெண்கள்) | | |
| | | உ) நேர்க்காணல் (25) மதிப்பெண்கள்) | | |
| 2) | உதவி பட்டு ஆய்வாளர் (இளநிலை பட்டப்படிப்பு தரம்) | அ) பொது அறிவு – 25 வினாக்கள் (43.75 மதிப்பெண்கள்) | 2 மணி நேரம் | 200 |
| | | ஆ) பொது அறிவியல் – 25 வினாக்கள் (43.75 மதிப்பெண்கள்) | | |
| | | இ) பட்டு வளர்ச்சி – 25 வினாக்கள் (43.75 மதிப்பெண்கள்) | | |
| | | ஈ) அறிவுக்கூர்மை திறன் – 25 வினாக்கள் (Aptitude Test) (43.75 மதிப்பெண்கள்) | | |
| | | உ) நேர்க்காணல் (25) மதிப்பெண்கள்) | | |

## 7. தேர்வு மையங்கள்

| வ. எண் | தேர்வு மையம் |
|---|---|
| 1 | சென்னை |
| 2 | சேலம் |
| 3 | திருச்சி |
| 4 | தருமபுரி |
| 5 | மதுரை |
| 6 | திருநெல்வேலி |

## 8. தேர்வு செய்யப்படும் முறை

தேர்வு இரு கட்டங்களாக நடைபெறும். அதாவது

- எழுத்துத் தேர்வு (கொள்குறி வகை)
- வாய்மொழித்தேர்வு என்பது நேர்முகத் தேர்வாக நடைபெறும். இந்நேர்முகத்தேர்வு இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, சேலம் அலுவலகத்தில் நடைபெறும்.
- எழுத்துத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
- எழுத்துத் தேர்வு (கொள்குறி வகை) மற்றும் வாய்மொழித் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்களின்படி இனவழிச் சுழற்சி ஒதுக்கீடு விதிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் இறுதியாக தேர்வு செய்யப்படுவர்.

## 9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய நடைமுறைகள் :

www.sericultureexam.com. என்ற இணைய தளத்தில் விண்ணப்ப படிவம் வெளியிடப்பட்டுள்ளது. அவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து இணையத்தின் வாயிலாக அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் மார்பளவு வண்ணப் புகைப்படம் மற்றும் மாதிரிக் கையொப்பத்தினையும் (specimen signature) இணையத்தின் வாயிலாக அனுப்ப வேண்டும். அவ்வாறு இணையத்தின் வாயிலாக விண்ணப்பிக்கும்போது ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனிப்பட்ட உபயோகிப்பாளர் பெயர் (user name) மற்றும் ரகசிய குறியீடு ( Password) வழங்கப்படும். இவற்றைக் கொண்டு விண்ணப்பதாரர்கள் இணையதளத்தினைப் பயன்படுத்தலாம். இணையத்தின் வாயிலாக அனுப்பப்பட்ட விணப்பத்தினைப் பூர்த்தி செய்து 'பிரிண்ட் அவுட்' செய்து அதில் விண்ணப்பதாரர் கையொப்பம் இட்டு விண்ணப்பத்துடன் தேவையான அனைத்துச் சான்றிதழ் நகல்கள் சுய சான்றொப்பம் செய்து தேர்வுக் கட்டணத்துக்கான கேட்பு வரைவோலையோடு **இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, நேதாஜி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636 007"** என்ற முகவரிக்கு **28.01.2016** மாலை **5.45** மணிக்குள்ளாக கிடைக்கப்பெற வேண்டும். மூலச்சான்றிதழ்கள் (Original Certificates) –ஐ அனுப்பக்கூடாது. கீழ்க்காணும் சான்றிதழ்களைச் சுய சான்றொப்பம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் இணைத்து தபாலில் அனுப்ப வேண்டும்.

## அ) இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிக்கு அனுப்பப்பட வேண்டிய சான்றிதழ்கள்

1. பத்தாம் வகுப்பு (SSLC) மதிப்பெண் பட்டியல் ( பொது அறிவியல் ஒரு பாடமாக இருக்க வேண்டும்.)
2. சாதிச் சான்றிதழ்
3. மாற்றுச் சான்றிதழ்
4. தமிழ் வழி பயின்றதற்கான சான்றிதழ்
5. ரூ.500/– க்கான கேட்பு வரைவோலை (அசல்)
6. 6 மாதங்களுக்கு குறையாத பட்டு வளர்ப்பு செயல்முறை அனுபவச் சான்றிதழ்
7. மாற்றுத் திறனாளி / முன்னாள் ராணுவத்தினர் / ஆதரவற்ற விதவை என்பதற்கான உரிய அலுவலரிடம் பெறப்பட்ட சான்றிதழ்.
8. இறுதியாக கல்வி பயின்ற நிறுவனத்திடமிருந்து பெற்ற நடத்தைச்சான்றிதழ்
9. பத்தாம் வகுப்பிற்கு (SSLC) கூடுதலாக கல்வித்தகுதி பெற்றிருப்பின் அதற்கான கல்வி சான்றிதழ்கள்

## ஆ) உதவி பட்டு ஆய்வாளர் பதவிக்கு அனுப்பப்பட வேண்டிய சான்றிதழ்கள்

1. பத்தாம் வகுப்பு (SSLC) மதிப்பெண் பட்டியல்
2. மேல்நிலை (+2) கல்வி மதிப்பெண் பட்டியல்
3. பட்ட படிப்பிற்கான சான்றிதழ் / இணையான பட்டப்படிப்பு சான்றிதழ் இருப்பின் (Equivalent Degree if any)
4. சாதிச் சான்றிதழ்
5. மாற்றுச் சான்றிதழ்
6. தமிழ் வழி பயின்றதற்கான சான்றிதழ்
7. ரூ.500/– க்கான கேட்பு வரைவோலை (அசல்)
8. 6 மாதங்களுக்கு குறையாத பட்டு வளர்ப்பு செயல்முறை அனுபவச் சான்றிதழ்
9. மாற்றுத் திறனாளி / முன்னாள் ராணுவத்தினர் என்பதற்கான உரிய அலுவலரிடம் பெறப்பட்ட சான்றிதழ்கள்.
10. இறுதியாக கல்வி பயின்ற நிறுவனத்திடமிருந்து பெற்ற நடத்தைச்சான்றிதழ்
11. கூடுதலாக கல்வித்தகுதி பெற்றிருப்பின் அதற்கான கல்வி சான்றிதழ்கள்

## 10. பொதுவான தகவல்கள்

1) பணியிடங்களை நிரப்ப இனவழிச் சுழற்சி கடைபிடிக்கப்படுகிறது. காலிப்பணியிட ஒதுக்கீடு தற்போதுள்ள விதிகளின்படி அமைகிறது.
2) அரசாணை நிலை எண் 145, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (S) துறை, நாள் 30.09.2010–ல் நேரடி நியமனத்திற்குரிய காலிப்பணியிடங்களில், 20 சதவிகித காலிப் பணியிடங்களை முன்னுரிமை அடிப்படையில் தமிழ்மொழியில் கற்றவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீடு இப்பணி நியமனத்தில் கடைப்பிடிக்கப்படும். இப்பணி நியமனத்திற்கான பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைத் தமிழ் மொழி மூலம் பயின்ற விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே மேற்கூறிய இட ஒதுக்கீடு பொருந்துவதாகும். இந்தத் தமிழ்வழிக் கல்வி இட ஒதுக்கீட்டின் கீழ் பயனடைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பயின்ற கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைத் தமிழ்வழியில் பயின்று பெற்றார் என்பதற்கான சான்று பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். தமிழ்வழிக் கல்வியில் பயின்றோர்க்கு அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப தேர்வு செய்வதற்கான தகுதியான விண்ணப்பதாரர்கள் கிடைக்காத பட்சத்தில் தமிழ்வழியில் பயிலாத தகுதியான சம்மந்தப்பட்ட இனப்பிரிவைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு அக்காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

3) அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடைபெறுவதற்கு முன்புவரை காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும்.
4) மகளிருக்கென்று ஒதுக்கப்பட்ட பிரிவுகளில் தகுதியான மகளிர் விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில் அதே இனப்பிரிவு சார்ந்த இட ஒதுக்கீட்டில் உள்ள ஆண் விண்ணப்பதாரர்களை கொண்டு நிரப்பப்படும்.
5) அடிப்படைத்தகுதிகள், கல்வித்தகுதி, இதரத்தகுதிகள், கட்டணம், வயது, இனம் மற்றும் சாதி குறித்து விண்ணப்பத்தில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
6) இணையதளம் வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டும் நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழி மூலமாகவோ அனுப்ப வேண்டும். **விண்ணப்ப அஞ்சல் உறையின் மீது விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.**
7) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களுக்கான மூலச்சான்றிதழ்கள் நேர்முக தேர்வின்போது சமர்பிக்க வேண்டும். நேர்முக தேர்வின்போது மூலச்சான்றிதழ்களை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு பரிசீலிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
8) விண்ணப்பதாரர்கள் தாங்கள் கோரும் இணைக்கல்வி தகுதிக்கான அரசாணை ஏதேனும் வைத்திருப்பின் அதை விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், இவ்வலுவலகம் மூலம் கோரப்படும் தருணத்தில் அதனை சமர்ப்பிக்க வேண்டும்.
9) பட்டப்படிப்பு 10+2+3 என்ற கல்வி முறையில் பயின்றுள்ளதாக இருக்க வேண்டும்.

## 11) <u>விண்ணப்பதாரர்கள் தேர்வு அறையில் கடைபிடிக்க வேண்டிய அறிவுரைகள்</u>

1) பந்துமுனைப் பேனா ( கருப்பு மை ) கொண்டு வரவேண்டும்.

2) எழுத்துத் தேர்வின்போது விண்ணப்பதாரர் தன்னுடன் பேஜர் (Pager), கைபேசி, கால்குலேட்டர் மற்றும் மின்னணு ஞாபகக் குறிப்புகள், புத்தகங்கள், மற்றையவை அல்லது எந்தவொரு மின்னணுக் கருவி அல்லது மின்னணுப் பதிவு இயந்திரம் தனியாகவோ அல்லது விண்ணப்பதாரர் பயன்படுத்தும் கைக்கடிகாரம் அல்லது வளையம் போன்றவற்றின் பகுதியாகவோ உள்ளதைக் கொண்டுவர அனுமதிக்கப்பட மாட்டாது.

3) மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றை விண்ணப்பதாரர்கள் தங்களுடன் வைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர்கள்தொடர்ந்து தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும் / அல்லது தேர்விலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். தேவை எனில், அவ்விடத்திலேயே உடல் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

4) விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட அனுமதிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள கைபேசி உள்ளிட்டவற்றைத் தாங்களே முன்வந்து எடுத்து வரவேண்டாம் எனத் தெரிவிக்கப்படுவதுடன் தேர்வு அறைக்கு வெளியில் வைத்திருக்கும் பட்சத்திலும் அவற்றின் பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் உறுதி வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5) தேர்வாளர்கள் பக்கத்தில் உள்ளவரது விடைத்தாளை பார்த்து எழுதவோ அல்லது தனது விடைத்தாளைப் பார்த்து, பிறர் எழுத அனுமதிக்கவோ, அல்லது பரிமாறிக்கொள்ளவோ, அல்லது வாங்கவோ அல்லது அதுபோன்ற தவறான எவ்விதமான உதவி பெற முயலவோ கூடாது.

**6)** விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக்கான நுழைவுச்சீட்டு இவ்வலுவலகம் மூலம் அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச்சீட்டினை விண்ணப்பதாரர்கள் (www.sericultureexam.com.) என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நுழைவுச்சீட்டு இல்லாத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**12) இளநிலை பட்டு ஆய்வாளர் பதவிக்கான இறுதி தேர்வு முடிவுகள், சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனுக்கள் WP. 28193/2014 மற்றும் WP. 28206/2014 மீதான இறுதி தீர்ப்பாணைக்கு உட்பட்டது.**

**இயக்குநர்**
**பட்டு வளர்ச்சித்துறை, சேலம்.**